Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Regd. No. 2975.

ஸ்ரீ:

SRI RAMANUJAN

Editor: P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM-3.

ஸ்ரீ ராமாநுஜன் 252

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 6 ஜீவியச் சந்தா ரூ. 116.

பொருளடக்கம்.

1. திருநாகைத் திருப்பதியநுபவம்
2. மாமுனிகள் மஹோத்ஸவ நிகழ்ச்சி
3. ஸம்வத்ஸராந்த விஜ்ஞாபனம்
4. நமது மனோரத வெள்ளங்கள்
5. முக்கியமான வேண்டுகோள்
6. மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியநுபவம்
7. எம்பெருமானை நோக்கிய கேள்விகளின் கருத்து
8. ஸௌபரிமுனிவரின் வரலாறு
9. அபூர்வக்ரந்த லாபத்தைப்பற்றி
10. மார்கழித்திங்கள் காலக்ஷேபம்
11. சிறந்த ரத்னத்தையிழந்தோம்
12. மற்றொரு ரத்னமும் மறைந்தது
13. பக்தி ப்ரதானமா ஆசாரம் ப்ரதானமா?
14. பதரிகாச்ரம ப்ரம்மயஜ்ஞ நிகழ்ச்சி
15. ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமிகள்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி *
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி *
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1969 டிசம்பர்மீ ஸௌம்யஸூ மார்கழிமீ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ ராமாநுஜன் 252.



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலம் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை
ஆசிரியர் : ஸ்ரீ காஞ்சீ: P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 21	ஸௌம்யஹ மார்கழிமீ 1969 டிஸம்பர்மீ	ஸஞ்சிகை 12

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

19. திருநாகைத் திருப்பதியநுபவம்.

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையில்நீ
ஆர்ந்ததற்கோர் கைம்மா றறிகிலேன்—பூந்துவரை
மன்னு!கை யாழி வலவா! வலம்புரியாய்!
தென்னுகை யாயருளிச் செய்.

பூ துவரை மன்னு } அழகிய த்வாரகாபுரிக்கு அதிபதியே!
கை ஆழி வலவா [வலம் கை ஆழியாய்] } வலத்திருக்கையில் திருவாழியைக் கொண்டவனே!
வலம்புரியாய் –வலம் புரிச்சங்கமுடையவனே!
தென் நாகையாய் } அழகிய நாகைத் திருப்பதியிலுறைபவனே!
சேர்ந்து உனக்கு குற்றேவல் செய்திலன் } உன்னைச் சரண மடைந்து சிறியதொரு கைங்கரியமும் செய்திலேன்;
(அப்படியிருந்தும்)
என் சிந்தையில் நீ ஆர்ந்ததற்கு } அடியேனது மனத்தில் நீ பொருந்தி யெழுந்தருளியிருப்பதற்கு
ஓர் கைம்மாறு அறிகிலேன் } ஒரு பிரதி யுபகார மறிகின்றிலேன்;
அருளிச் செய் | ஏதேனுமிருந்தால் அதனை இன்னதென்று கூறியருளாய்.

* * *—நம்மாழ்வார் திருவாய்மொழியில் வானமாமலை யெம்பெருமானை நோக்கி "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன்" என்றருளிச் செய்ததை அடியொற்றியது இது. *

மாமுனிகளினுத்ஸவ நிகழ்ச்சி

மணவாளமாமுனிகளின் ஐப்பசித் திருமூல மஹோத்ஸவம் உலகமெங்கும் நடைபெற்றாலும் தேவப் பெருமாள் ஸந்நிதியில் நடைபெறும் க்ரமம் அத்விதீயம், அதிவிலக்ஷணம், அப்ரமேயம், அத்யத்புதம் என்பதை அநுபவரஸிகர்களே யறிவர். ஒவ்வொரு நாளும் காலை வேளைகளில் 10-மணியிலிருந்தே திருமஞ்சன

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸந்நாஹம். 12 மணிக்குத் திருமஞ்சனம் முடிவுபெறும். உடனே அருளிச்செயல் ஸேவை தொடங்கி 4-மணிக்குப் பகல் வேளை சாத்துமுறை. பிறகு இரவு 7-மணிக்கு ஸன்னிதித் திருவாசல் கொட்டகைப் பந்தலில் பத்தியுலாவி ஊஞ்சல் கண்டருளி ஆஸ்தானத்திலமர்ந்து 8 மணி முதல் 11-மணிவரை திருவாய்மொழி ஸேவை "நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழியத்" திருச்செவிசாத்தியருளியாகும். இவ்வண்ணமாகவே ஒன்பது நாளைய நிகழ்ச்சி. திருமூல நன்னாளில் காலை 11 மணியிலிருந்து 2-மணிவரை திருமஞ்சனம். பிறகு திருப்பாவையும் பெரிய திருமொழி சேஷமும் திருச்செவிசாத்தியருளி மாலை 6-30 க்கு திருப்பாவை சாத்துமுறை. உடனே தேவப்பெருமாள் அற்புதமான திருக்கோலங் கொண்டு வீதியாரவெழுந்தருளி மாமுனிகள் ஸன்னிதிக் கெழுந்தருளி வாசற் பந்தலில் மாமுனிகளுக்கு பஹுமானம் ஸாதித்தருளி உள்ளே சீரியசிங்காசனத்திருந்து இரவு 10 மணி முதல் பின் மாலை 4 மணிவரை அருளிச்செயல் ஸேவை சாத்துமுறை கோஷ்டிகள் நடைபெற்று * கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணையும் தருவாயில் மாமுனிகளோடு ஸன்னிதிக் கெழுந்தருளி விடைதந்தருளியான பின் மாமுனிகள் ஸன்னிதிக் கெழுந்தருளி கந்தப்பொடி வஸந்தோத்ஸவம் கண்டருளினார், இயற்பா சாத்துமுறையும் அடைவே நடைபெற்றுப் பேரின்பவெள்ளம் பெருகிப் பெரிய கிதயுகமாயிற்று.

ஸம்வத்ஸராந்த விஜ்ஞாபனம்

நமது ஸ்ரீராமாநுஜன் இன்று இருபத்தொரு பிராயப்பூர்த்தி பெறுவதை மிக மகிழ்ச்சியுடன் விஜ்ஞாபிக்கிறேன். இருபத்தொன்று என்கிற லக்கத்திலிருந்து நினைவுக்கு வந்த விசேஷங்களை ஈண்டு விளக்கியுரைக்க விரும்புகிறேன். அடியேனுடைய ஆசாரியராய் ஜகத் விக்க்யாதரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபய வே. பிரதிவாதிபயங்கரம் ஜகத்குரு காதிஸ்வாமி ஆரம்பித்து நடத்திவந்த மஞ்ஜுபாஷிணி யென்னும் ஸம்ஸ்க்ருத வாரப் பத்திரிகையை, சென்ற பரீதாவி வருஷத்தில் ஸ்ரீ ஸ்வாமி அடியேனிடம் ஒப்படைத்து, பன்னிரண்டாண்டு வடநாட்டு ஸஞ்சாரத்தை ஸங்கல்பித்து திக்விஜய யாத்திரை தொடங்கியருளினார். அப்போது இருபத்தொரு ஸம்வத்ஸரகாலம் அந்த மஞ்ஜுபாஷிணி பத்திரிகையை வெள்ளிக்கிழமை தோறும் தவறாது நடத்திவந்தேன். அத்தோடுகூட (ஸ்வாமி நியமனங்கொண்டே) ப்ரஹ்மவித்யா என்றொரு தமிழ்ப் பத்திரிகையையும் மாதந்தோறும் மூன்று வருஷகாலம் நடத்திவந்தேன். ஸ்ரீ ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளினவுடனே இப்பத்ரிகைகளிரண்டையும் நிறுத்த நேர்ந்தது.

பிறகு சிலவாண்டுகள் கழித்து ஸ்ரீ வைஷ்ணவஸுதா என்கிற ஸம்ஸ்க்ருத (மாஸிக) பத்ரிகையையும் அம்ருதலஹரீ என்கிற தமிழ் மாதப் பத்ரிகையையும் நடத்தத் தொடங்கினேன். ஸ்ரீவைஷ்ணவஸுதா என்கிற பெயரைக் கண்ட வடநாட்டுப் பண்டிதர்கள் (பல மதஸ்தர்கள்) "இப்பத்ரிகை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமல்லாமல் பொதுவாக ஆஸ்திக வைதிகர்களுக்கெல்லாம் உதவும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படி பத்ரிகையின் நாமதேயம் அமைக்கலாகாதோ? என்று தெரிவித்ததனால் ஸ்ரீவைஷ்ணவஸுதா என்னும் பெயரை மாற்றி வைதிகமநோஹரா என்று பெயரிட்டு நடத்திவருகிறேன். இதற்கும் இருபத்தொரு பிராயம் பூர்த்தியாகிறது. ஸ்ரீரங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு 15௵ நடந்து வந்த அம்ருதலஹரீ பத்ரிகை பதினாருவதாண்டில் சில அஸௌகரியங்களினால் நிறுத்தப்பட்டது.

ஸ்ரீராமாநுஜ–என்னும் பெயரால் தொடங்கப்பட்ட தெலுங்கு பாஷை மாதப் பத்திரிகையும் இருபத்தொரு வருஷ காலமாக நடைபெற்று வருகின்றது. இந்த தெலுங்கு பத்ரிகையும் மேலே குறித்த ஸம்ஸ்க்ருத பத்ரிகையும் அச்சுக் கூடத்தின் அஸௌகர்யத்தினால் சிற்சில மாதங்களில் தடைபட்டுத் தாமதித்து வெளிவருவதுண்டு; ஸ்ரீராமாநுஜன் அப்படியல்லாமல் ஒரு மாதமும் தடைபடாமலும், பெரும்பாலும் பின் மாதத்தது முன் மாதத்திலேயே வெளிவந்து கொண்டுமிருக்கின்றது. இதற்குக் காரணம் அன்பர்களின் ஆசியும், பத்ரிகையின் தேவதையான ஸ்ரீராமாநுஜருடைய க்ருபாகடாக்ஷமுமேயாகும்.

இதர பத்ரிகைகளில் இதர பண்டிதர்களின் கட்டுரைகளும் வெளிவருவது போல் இப்பத்திரிகையில் ஏன் வெளிவருவதில்லையென்று பலர் கேட்பதுண்டு. இதற்கு நாம் என்னவிடை கூறுவது? எழுதவல்லவர்களான பல ஸஹ்ருதயர்களையும் நாம் ப்ரார்த்திப்பதுண்டு இப்போதும் ப்ரார்த்திக்கிறோம். எழுதியனுப்பினால் வெளியிடத்தட்டில்லை. கடந்த இருபத்தொரு ஸம்வத்ஸர காலமாக அபிமானித்த அன்பர்கள் மேன் மேலும் மிக்க ஊக்கத்துடன் அபிமானித்து அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்தித்து நிற்கிறேன். ... ... *

நமது மனோரதப் பெரு வெள்ளங்கள்

நிகழும் ஸௌம்யவருஷம் இன்று முக்கால் பங்கு முடிவு பெற்றது. இன்னும் ஒரு பங்கு சேஷித்துள்ளது. அஸாதாரணமான ஸாதாரண ஸம்வத்ஸரம் அதிஸமீபத்திலுள்ளது, மணவாளமாமுனிகளுக்கு ஷஷ்டியப்த பர்யாயங்கள் பத்து பூர்த்தியடைவதை முன்னிட்டு ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கு நாம் செய்ய ஸங்கல்பித்திருக்குமவற்றை ஏற்கெனவே விளக்கமாக வெளியிட்டிருக்கிறோம். இப்போதும் சுருக்கமாக வெளியிடுகிறோம். மாமுனிகள் பூர்வாசார்ய திவ்ய ஸ்ரீஸூக்திகளையே ஓவாத வூணாக உண்ணப் பெற்றவராதலால் அந்த திவ்ய ஸூக்திகளில் ஒன்றுக்கும் துர்ப்பிக்ஷமில்லையென்னும்படியாக, அரிதாயிருந்துள்ள ஸகல ஆசார்ய ஸூக்திகளையும் ஸர்வ ஸுலபமாக்குவது முக்கிய நோக்கம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நோக்கமென்பதோடு நிற்கவில்லை. ஆகவேண்டிய காரியங்கள் அல்லும் பகலும் ஆறுமாத காலமாகவே நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் தமது விசாலமான திருவுள்ளத்தினால் இன்று (28-11-69) மிகச் சிறந்த நியமன மொன்று தந்தருளினார். (அதாவது) ஸ்ரீவைஷ்ணவ திவ்ய ஸ்தலங்களாக நாம் கொண்டாடுகிற நூற்றெட்டுத் திருப்பதிகளில் மலைநாட்டுத் திருப்பதிகளும் வட நாட்டுத் திருப்பதிகளும் நீங்கலாக, தொண்டைநாடு நடுநாடு சோழநாடு பாண்டிநாடு ஆகிய இந்நான்கு நாடுகளில் எண்பத்துமூன்று திருப்பதிகள் விளங்குவதால் இவற்றில் ஸேவை ஸாதித்தருளும் எம்பெருமான்களினுடையவும் மணவாள மாமுனிகளினுடையவும் திருக் கோலங்களைக் கொண்ட ஒரு சிறந்த விருந்தான சீர்மைமிகு புத்தகம் விரைவில் வெளிவருமாறு செய்யவேண்டும்— என்று. ஸத்யகாம ஸத்யஸங்கல்பராக ப்ரஸித்திபெற்ற ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி திரு வுள்ளம்பற்றியாயிற்றென்றால் அது நிறைவேறியாயிற்றென்றே நினைக்கத் தக்க தன்றோ. ஒவ்வொரு திவ்ய தேசத்திற்கும் தெரிவித்துத் திருவுருவப் படங்களை வரவழைத்தாக வேண்டிய விலம்பமுண்டே. அவ்வளவே தாமதம்.

எம்பெருமான் திருக்கோலங்களும் மாமுனிகளின் திருக்கோலங்களும் எந்த ரீதியாக வெளிவரு மென்பதை இப்போதே சிறு சான்றாகக் காட்டிவைக்கி றோம். மேலே காண்க.

முக்கியமான வேண்டுகோள்

திவ்ய தேசங்கள் தோறும் பெரும்பாலும் அடியேனுக்கு ஆப்தர்கள் உள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் விண்ணப்பம் விடுப்பேன். செலவுக்கு வேண்டிய தொகையையும் அனுப்புவேன். அவரவர்கள் ச்ரமதையோடு தாமத மின்றி வேண்டுகோளை நிறைவேற்றியருள்வார்களாக. .... *

அறிக்கை

மணவாளமாமுனிகளின் அறுநூற்றாண்டு நிறைவு மஹோத்ஸவத்தை ஒரு வியாஜமாகக் கொண்டு நாம் அச்சிட உத்தேசித்திருக்கும் நூல்களின் பெயர்களை ஏற்கெனவே வெளியிட்டிருக்கின்றோம். அவை தவிர இன்னும் சில நூல்களும் அச்சிடப்படுமேயன்றி, உத்தேசித்த நூல்களில் எதுவும் விடுபடமாட்டாது. பெரிய திருமொழியாயிரத்திற்கும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தை ஒரே ஸம்புடமாக அச்சிட்டு வெளியிடவேணு மென்னும் அவா மிக மிகவுள்ளது. இது ஸாதாரண ஸம்வத்ஸர ஐப்பசித் திருமூலத்திற்குள் முடிவுபெறாவிடினும் அச்சு தொடங்கி வெகு தூரம் நடைபெறும். புத்தூரில் வாழும் ஸ்ரீமதுபயவே. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L., ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சந பத்ராதிபர் ஸ்ரீ வசன பூஷணத்தை இரண்டு வியாக்கியானங்களோடும் இரண்டு அரும்பதவுரை களோடும் வெகு நேர்த்தியாக அச்சிட்டு வருகிறார். இங்ஙனே மற்றுஞ் சில கல்வியாளர்களும் முக்கியமான நூல்களைப் பதிப்பிக்கமுயலவேண்டும்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள்.

தேவப்பெருமாள் ஸன்னிதி மணவாளமாமுனிகள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மணவாள மாமுனிகளின் ஒரு ஸ்ரீ ஸூக்தியில் அநுபவம்.

மாமுனிகள் யதிராஜவிம்சதியில் இரண்டாவது சுலோகத்தில் "ஸ்ரீபட்டநாத பரகால முகாப்ஜ மித்ரம்" என்று எம்பெருமானுர்க்கு விசேஷணமிட்டருளுகிறுர். இதில், பெரியாழ்வாரையும் திருமங்கை யாழ்வாரையும் சேர்த்துப் பேசியிருப்பது கொண்டு சில ரஸாநுபவங்கள் செய்யக் குதூஹலம் கிளர்கின்றது. ஸ்வாமிதாமே உபதேசரத்தினமாலையில் "மாறன்பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங் கூறவவதரித்த" என்றருளிச் செய்தபடி நம்மாழ்வார்க்கும் திருமங்கை யாழ்வார்க்கும் ஒரு சேர்த்தி ஸுப்ரஸித்தமாகவுள்ளது. அது நிற்க, இப்போது யதி ராஜவிம்சதி ஸ்ரீஸூக்தி கொண்டு பட்டநாதனுக்கும் பரகாலனுக்குமுள்ள சேர்த்தி யினுல் தோற்றும் சொற்பொரு ளின்பங்களை யநுபவிக்கின்றேம். "நன்றுந் திருவுடையோம்" என்று தொடங்கி ஸேவிக்கும் இயற்சாத்தில் "வாழியரோ தென் புதுவை வாழியரோ தென்குறையல் மாநகரம்" என்று பெரியாழ்வாருடையவும், திருமங்கை மன்னனுடையவும் திருவவதாரஸ்தலங்களுக்கு ஒருசேர்த்திகாணப்படா நின்றது. இராமாநுச நூற்றந்தாதியில் *சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை யொன்றும் பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள் பேராதவுள்ளத்திராமானுசன்* என்று எம்பெருமானுர்க்குப் பெரியாழ்வார் திருவடிகளிலே ப்ராவண்யமுடைமையைப் பேசினவுடனே *தண்டமிழ்செய்த நீலன்தனக்கு உலகிலினியானை எங்களிராமானுசனை* என்று (நீலனென்னுந் திருநாமமுடைய திருமங்கையாழ்வார் பக்கலிலே ப்ரேமமுடைமை பேசப் பட்டதுங் காண்க. இடையில் தாழ்வொன்றில்லாமறை தாழ்ந்தென்கிற பாசுரத்தில் ஆண்டாள் திறத்திலீடுபாடு பேசப் பட்டிருந்தாலும் அது பெரியாழ்வாரிலே அந்தர்ப்பூதமேயாகும். ஆக இப்படி நிரூபிக்கக் கூடிய விஷயங்களால் பெரியாழ்வார்க்கும் திருமங்கையாழ்வார்க்கும் ஒரு சேர்த்தியைப் பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றி யிருக்கின்றுர்களென்பது தெளிவாகும். இதற்குப் பல காரணங்களுண்டு. அடியேனுடைய சிறிய ஞானத்திற்கு எட்டிய காரணவிசேஷங்களை இங்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

1. பெரியாழ்வார் தென்மதுரை மாநகரில் பாண்டியன் கொண்டாட வந்து சேர்ந்து பரதத்வநிர்ணயம் செய்தருளி ஊர்வலம் வருகையில் பரமபதநாதன் பெரிய திருவடியின் மீதேறி வந்து ஸேவைஸாதிக்க, அப்போது ஆழ்வார் பல்லாண்டு பாடினுர். மல்லாண்டதிண்டோளுக்கும் திருமேனி வண்ணத்திற்கும் திருவாழி திருச்சங்கு முதலானுர்க்கும் மங்களா சாஸனம் செய்தருளினுர். இது இதிஹாஸத்தாலும் பெரியாழ்வாருடைய ஸ்ரீ ஸூக்தியாலும் ஸித்தமான விஷயம். ஆழ்வார் தென்மதுரைக்கு எழுந்தருளினதும் அவர்க்கு எம்பெருமான் பெரிய திருவடியின் மீதெழுந்தருளி வந்து காட்சி தந்ததும் இதிஹாஸ ஸித்தம். மற்றது அவருடைய திவ்யஸூக்திஸித்தம். பெரியாழ்வார் திருமொழியின் முடிவில் (5—4—2) * பறவையேறு பரம் புருடா! நீ யென்னைக் கைக்கொண்டபின் * என்று பாசுரமிருக்கையாலே எம்பெருமான் கருடாரூடனுய்வந்து ஸேவை ஸாதித்த விஷயங்கூட ஸ்ரீ ஸூக்திஸித்தமென்று கொள்ளலாமே யென்னில்; அந்த பாசுரம் மதுரையில் பவனி வரும்போது ஸேவை ஸாதித்தபடியைச் சொல்லுகிறதென்று திண்ணமாகக் கொள்வதற்கு

2—

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நிலமல்லாமையாலே அது இதிஹாஸஸித்தமென்றும். அதுவும் ஸ்ரீ ஸூக்திஸித்தமென்று கொள்ளில் குறையில்லை. இதே விஷயத்தில் திருமங்கையாழ்வாருடைய அநுபவமிருக்கும்படியைக் காணீர்; கேளீர், பெரியதிருமொழியில் (9—2—5) *கோழியுங் கூடலுங் கோயில் கொண்ட* என்கிற பாசுரத்தினாலும். அதற்கு மேலேயுள்ள (பாசுரம்8.) * அஞ்சிறைப்புள்ளுமொன்றேறி வந்தார் * என்கிற ஸ்ரீ ஸூக்தியாலும் இவ்வநுபவங்களெல்லாம் விசதமாகத் தெரிவிக்கப்படுகின்றன. "அஞ்சிறைப்புள்ளு மொன்றேறி வந்தார்" என்பதனால் பெரியதிருவடியின் மீதேறி வந்து காட்சி தந்தருளினது ஸுஸ்பஷ்டமாகக் கூறப்பட்டது. மற்றவிஷயங்களெல்லாம் "கோழியுங் கூடலும்" என்ற முந்தின பாசுரத்தில் பூர்த்தியாகப் பேசப்பட்டுள்ளன. "கோழியுங் கூடலுங் கோயில்கொண்ட" என்றவிடத்து கூடல் என்றது தென்மதுரைக்கு மங்களாசாஸனமான பாசுரம். (கோழியென்றது உறையூர்.) "குன்றமன்ன பாழியந் தோளுமோர் நான்குடையர்" என்றதனால் பெரியாழ்வாரீடுபட்ட மல்லாண்ட திண்டோள் ப்ரஸ்தாவிக்கப்பட்டது. 'வாழியரோ' என்றதனால் பல்லாண்டு பாடினமை வ்யக்தம். "இவர் வண்ண மெண்ணில் மாகடல் போன்றுளர்" என்றதனால் "மணிவண்ணா!" என்று பெரியாழ்வாரீடுபட்ட திருநிறம் ஸூசிதமாயிற்று. "கையில் வெய்ய ஆழியொன்றேந்தியோர் சங்கு பற்றி" என்பதனால் "சுடராழியும் பல்லாண்டு" "அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே" என்றதுஸ்மரிப்பிக்கப்பட்டது.

2. பெரியாழ்வார்க்குத் திருக்கோட்டியூரிலே மஹத்தான அபிநிவேசம்; திருப்பல்லாண்டில் *அல்வழக்கொன்று மில்லா வணி கோட்டியர்கோன் அபிமான துங்கன் செல்வனைப்போலத் திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்* என்று திருக்கோட்டியூரிலவதரித்த வொரு மஹானைப் புகழ்ந்து பேசியிருப்பதானது திருக்கோட்டியூரில் ப்ராவண்யாதிசயத்தினாலே. திருமங்கை யாழ்வார் தாமும் திருக்கோட்டியூரில் தம்முடைய ப்ராவண்யாதிசயத்தைக் காட்டினார்; எப்படி காட்டினாரென்னில்; பதிகம்பாடி திவ்யதேசங்களை யநுபவித்து வருகையில் திருக்கோட்டியூரைப் பாடின பிறகு மற்றொரு திவ்யதேசத்தைப் பாடலாகாதென்று தம்முடைய மங்களாசாஸனத்தை அந்தத் திருப்பதியோடே நிறுத்தினார். திருக்குறுங்குடி முதலான சில. திவ்யதேசங்கள் திருக்கோட்டியூர்க்கு அப்பால் விளங்கச் செய்தேயும் அத் திருப்பதிகளின் அநுபவத்தைத் திருப்புல்லாணியோடே சேர்த்து முடித்துக்கொண்டு * எங்களெம்மிறை யெம்பிரான் * என்கிற திருக்கோட்டியூர்ப் பதிகத்தையே மங்களாசாஸனத்தில் முடிவாக வைத்திட்டது பெரியாழ்வாரிடத்து அபிநிவேசத்தினாலென்க.

3. வடநாட்டுத்திருப்பதிகளை மங்களாசாஸனம் செய்தவர் பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாருமாக இருவருமேயாவர். இதற்கு முதலில் பெரியாழ்வாரே வழிகாட்டினவர்; * வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தம் துவரை யயோத்தி இடமுடை வதரி யிடவகை யுடைய எம் புருடோத்தமனிருக்கை-கண்டமென்னும் கடிநகரே* என்றிவை முதலான பாசுரங்களினால் பெரியாழ்வார் காட்டிக்கொடுத்த வடநாட்டுத் திருப்பதிகளைத் திருமங்கையாழ்வார் விசேஷித்து அநுபவித்தார்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

4. திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தின் பெருமையை பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் பல பாசுரங்களினால் காட்டியும், பெரியாழ்வார் திருமொழியிலும் பல பல பாசுரங்களினால் விஸ்தரித்தும் போந்தார்; அதை யநுஸரித்தே திருமங்கையாழ்வார் * வாடினேன் வாடி * *கிடந்தநம்பி குடந்தைமேவி * முதலான பதிகங்களினால் திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையைப் பரக்கப் பேசினார்.

5. கண்ணபிரானுடைய இளம்பிள்ளைத் தனத்திலநுபவம் பெரியாழ்வார் தாம் விசேஷமாகச் செய்தருளினது. கண்ணனை யசோதைப்பிராட்டி பாவனையால் இடுப்பில் வைத்துக் கொண்டு அம்புலியழைத்தல், செங்கீரையாடுகவென்று வேண்டுதல், சப்பாணிகொட்டா யென்னுதல் அம்மமுண்ணவாராயென்று ஸ்தந்யபானத்திற்கழைத்தல், நீராட்டுதல், பூச்சூட்டுதல், கண்ணன் தீம்புகளைக் கொள்ளை கொள்ளையாகச் சொல்லி யநுபவித்தல் ஆகிய இதெல்லாம் பெரியாழ்வாரிடமே காண்பது இங்ஙனமே இவை திருமங்கையாழ்வாரிடத்திலும் காண்பதுண்டு. * செக்கரிளம் பிறைதன்னை வாங்கி நின் கையில் தருவன் * என்ற பாசுரத்தினால் அம்புலிப்பருவத்தை யநுபவித்தார். * பூங்கோதையாய்ச்சி பதிகத்தினால் சப்பாணிகொட்டா யென்றார். * சந்தமலர்க்குழல் பதிகத்தினால் அம்மமுண்ணவாராயென்றழைத்தார். *அன்பினால் ஞானநீர்கொண்டு ஆட்டுவனடியனேனே * என்று நீராட்டினார்; * தூய மாமாலைகொண்டு சூட்டுவன் தொண்டனேனே * என்று பூச்சூட்டினார் * மான முடைத் துங்களாயர்குலம் * காதில் கடிப்பிட்டு * முதலிய பதிகங்களினால் கண்ணன் தீம்புகளைக் கொள்ளை கொள்ளையாகச் சொல்லி யநுபவித்தார்.

6. கோபீவஸ்த்ராபஹரணம் என்கிற வொரு சேஷ்டிதத்தை * கோழி யழைப்பதன் முன்னம் பதிகத்தினால் ஆண்டாள் அநுபவிப்பதிருக்கட்டும்; ஆழ்வார்களில் யாரேனு மநுபவித்தாருண்டோவென்று கேட்டால் பெரியாழ்வாரநுபவித் தாரென்ன வேணும். * ஆற்றிலிருந்து விளையாடுவோங்களைச் சேற்றாலெறிந்து வளை துகில் கைக் கொண்டு * எங்கள் பூம்பட்டுக்கொண்ட அரட்டன்*என்றிவை முதலான பாசுரங்களினால் பெரியாழ்வாருடைய அநுபவம் காண்கிறோம்; அடுத்தபடியாக இவ்வநுபவம் திருமங்கையாழ்வார் பக்கலிலேதான் காண்பது. * துளையார்கரு மென் குழலாய்ச்சியர் தம் துகில் வாரியும்*அங்ஙனுந் தீமைகள் செய்வர்களோ நம்பீ! ஆயர்மடமக்களை, பங்கயநீர் குடைந்தாடுகின்றார்கள் பின்னே சென்றொளித்திருந்து, அங்கவர் பூந்துகில் வாரிக்கொண்டிட்டு * என்றிவை முதலான பாசுரங்களினால் அவ்வநுபவம் அறியத்தக்கது.

7. இந்திரனுக்கிட்ட சோற்றைத் தானே வாரியமுதுசெய்து மாரிப்பகை புணர்த்த கதையைப் பெரியாழ்வாரொருவரே பரக்கப் பேசினார்; குன்றெடுத்தானென்று பல ஆழ்வார்களும் பேசியிருந்தாலும் பூர்வகதாஸந்தர்ப்பத்தைப் பெரியாழ்வார் தாம் * கேட்டறியாதன கேட்கின்றேன் * அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் முதலான பாசுரங்களினால் பரக்கப் பேசினார். திருமங்கையாழ்வாரும் * ஆயிரங்கண்ணுடை யிந்திரனாருக்கென்று ஆயர் விழவெடுப்ப, பாசன நல்லன பண்டிகளால் புகப்பெய்தவதனையெல்லாம். .போயிருந்தங் கொரு பூதவுடிவு கொண்டு * அன்னதோர் பூதமாய் ஆயர்விழவின்கண், துன்னுசகடத்தால் புக்க

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெருஞ் சோற்றை, முன்னிருந்து முற்றத் தான் துற்றிய தெற்றனவும்* என்றிவை முதலான பாசுரங்களினால் விரிவாக அநுபவித்தார்.

8. பெரியாழ்வார் *நல்லதோர் தாமரைப் பொய்கையிலே "இல்லம் வெறி யோடிற்றாலோ என்மகளை யெங்குங் காணேன், மல்லரையட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ" என்று, தாய்ப்பேச்சில் மகள் கணவனோடுடன் சென்றதாகச் சொல்லி யநுபவித்தார். "ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டு போனான்" என்ற பாசுரத்தினாலும் எம்பெருமான் தானே ஸ்வீகரித்துப்போன மையை நன்கு வெளியிட்டார். திருமங்கையாழ்வார்க்கும் இவ்வநுபவமே * கள்வன் கொல் யானறியேன்*என்கிற திருமொழியில் செல்லாநின்றது. *கரியானொரு காளை வந்து வெள்ளிவளைக் கைப்பற்றி யழைத்துக்கொண்டு போனதாகவாயிற்று சொல்லப்படுகிறது. *மல்லரையட்டவன் பின் போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ* என்கிறார் பெரியாழ்வார்; * அவன் பின் நடந்து வயலாலிபுகுவர் கொலோ* என்கிறார் திருமங்கையாழ்வார். * உண்ணுஞ்சோறு பருகு நீர்த் திருவாய்மொழி யில் நம்மாழ்வாருடைய அநுபவம் இப்படிப்பட்டதன்று. அது தலைமகளின் தனிப் போக்கான அநுபவம்; பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்களின் அநுபவம் உடன் போக்கு என்று வாசியறியத்தக்கது

9. ஒருவர் பேசச் செய்தேயும் இருவர் பேச்சுப் போலப் பாசுரம் பாடுவது பெரியாழ்வார்க்கும் திருமங்கையாழ்வார்க்கும் ஒக்கும். பெரியாழ்வார் திரு மொழியில் * என்னாதன் தேவிக்கு * கதிராயிரமிரவி* இப்பதிகங்களிரண்டும் இரு வர் பாசுரம்போலமைந்தவை. திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியிலும் * மானமருமென்னோக்கி * என்கிற பதிகம் இத்தகைத்ததே.

10. திருமலைகளைப்பற்றிப் பாசுரம் பேசும்போது அவ்விடத்து நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து இழிபிறப்பாளருங்கூட தங்களுடைய உணவுகளை எம்பெருமானுக்கு நிவேதனம் செய்தே புஜிப்பதாகக் கூறுகின்றமை பெரியாழ்வாரிடத்திலும் திரு மங்கையாழ்வாரிடத்திலுமே கண்டது. திருமாலிருஞ்சோலைக்குப் பதிகம் பாடுகின்ற பெரியாழ்வார் * சிந்தப்புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள் அந்திப் பலி கொடுத்து ஆவத்தனஞ்செய் அப்பன் மலை*என்றும் * புனத்தினைக் கிள்ளிப் புது வவிக் காட்டி உன் பொன்னடி வாழ்கவென்று, இனக்குறவர் புதியதுண்ணுமெழில் மாலிருஞ்சோலை யெந்தாய்* என்றும் அருளிச்செய்ததை யடியொற்றின திருமங் கையாழ்வார் சிங்கவேள் குன்றப்பதிகத்தில் * பைங்கணானைக் கொம்பு கொண்டு பத்திமையால், அடிக்கீழ்ச் செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேள்குன்றமே* என் றருளிச்செய்தார்.

11. திவ்யதேசங்களிலீடுபடுகின்ற அரசர்களைப் புகழ்ந்துபாடுவதென்கிற பத் ததியைப் பெரியாழ்வார் * கொன்னவில் கூர்வேல்கோன் நெடுமாறன் தென்கூடல் கோன் தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே* பருப்பதத்துக்கயல் பொறித்த பாண்டியர் குலபதி போல்* என்கிற பாசுரங்களினால் காட்டியருளினர். இதைப் பின்பற்றியே திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணி, அட்டபுயகரம், பர மேச்சுர விண்ணகரம், திருநறையூர் முதலான திருப்பதிகளுக்கிட்டருளின பதிகங் களில்அவ்வவ்விடங்களிலே ப்ரவணர்களான ப்ரபுக்களைப் புகழ்ந்து பேசியுள்ளார்,

———

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எம்பெருமானை நோக்கிக் கேள்வி கேட்பதன் கருத்து.

எம்பெருமானைப் பல வகையாக அநுபவித்துக் கொண்டு போருகின்ற ஆழ்வார்கள் இடையிடையே எம்பெருமானை நோக்கிச் சில கேள்விகள் கேட்கக் காண்கிறோம். எம்பெருமானிடமிருந்து விடை கிடைக்கப் போகிறதென்கிற நம்பிக்கையினால் செய்த வினாக்களாகத் தோன்றவில்லை. மஹான்கள் நிஷ்ப்ரயோஜனமாகக் கேள்வி கேட்க மாட்டார்கள். கேட்கிற கேள்விகளிலிருந்து ஒரு விலக்ஷணமான அர்த்தம் வெளிவந்து தீரவேணும். ஓரிடத்திலுள்ள வினாவை இங்கெடுத்துக் காட்டி இன்பம் நுகர விரும்புகின்றேன்.

சோழ நாட்டில் சிறுபுலியூரென்பது ஒரு திவ்ய தேசம். அங்கு சலசயனப் பெருமாள் ஸேவை ஸாதித்தருளா நின்றார். பெரிய திருமொழியில் (7-9,) * கள்ளப் மனம் விள்ளும் வகை * என்று தொடங்குந் திருமொழி இத்தலத்தை மங்களாசாஸனம் செய்யும் பதிகம். இதில் ஏழாவது பாசுரம்—

"சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலைமலையுறையுமாயா!
எனக்குரையாயிது மறைநான்கினுளாயோ? தீயோம்பு கைமறையோர்
சிறு புலியூர்ச் சலசயனத்தாயோ? உனதடியார் மனத்தாயோ வறியேனே."

என்பது. இதன் பொருளாவது-மிகவுயர்ந்த திருமாலிருஞ்சோலை மலையிலே நித்யவாஸஞ் செய்கின்ற மாயனே! நீ நால்வேதங்களிலுள்ளே யிருக்கின்றாயோ? ஹோமத் தீயை வளர்க்கின்ற கையையுடையரான வைதிகர்கள் வாழ்கிற சிறு புலியூரில் சலசயனக் கோயிலிலுள்ளாயோ? உனது அன்பர்களின் நெஞ்சிலுள்ளாயோ? அறிகின்றிலேன். எனக்கு இதைத் தெரிய வருளிச் செய்யவேணும்—என்பதாம். திருமாலே நீ வேதங்களிலிருக்கின்றாயா? சிறுபுலியூர்ச் சலசயனக் கோயிலில் இருக்கின்றாயா? அன்பர் தம் உள்ளத்திலிருக்கின்றாயா? இன்னவிடத்திலிருக்கின்றாயென்று தெரியவில்லை; அடியேனுக்கு உண்மை தெரியும் படி யருளிச்செய்ய வேணு மென்று கேட்கிற விதற்கு என்ன திருவுள்ளமென்று ஆராயவேண்டும்.

சிறுபுலியூர் விஷயமாக அருளிச் செய்யப்படுகிற இத் திருமொழியில் இத்தலத் தெம்பெருமானை விளிக்க வேண்டியிருக்க, 'திருமாலிருஞ்சோலை மலை யுறையும் மாயா!' என்று அழகரை விளித்தது எதற்காக வென்று முன்னம் ஆராயவேண்டும். எம்பெருமான் எங்கும் நிறைந்த பெருமானென்பதை அல்பஜ்ஞர்களான நாமே தெரிந்து கொண்டிருக்கும்போது ஸர்வஜ்ஞரான ஆழ்வார் தெரிந்து கொள்ளாமலிருக்க ப்ரஸக்தியில்லை. ஒரு எம்பெருமான்தானே நால் வேதங்களிலும் திவ்ய தேசங்களிலும் அன்பர்களின் உள்ளத்திலும் மற்றும் பலபல விடங்களிலும் எழுந்தருளியிருப்பது அஸம்பாவித மன்றே. இவ்வர்த்தத்தை இவ்வாழ்வாரும் மற்றுள்ள வாழ்வார்களும் தம் தம் திவ்ய ஸூக்திகளில் பல விடங்களில் காட்டியு மிருக்கிறார்களே. அப்படியிருக்க, இங்ஙனே கேள்வி கேட்க வேண்டிய ப்ரஸக்தி என்ன? என்று விமர்சிக்க வேண்டும்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உண்மையில் இது வினாவன்று; ஆச்சரியமான அநுபவ ப்ரஞ்ஞளிகளில் இது வொரு விலக்ஷணமான வகை. சிறுபுலியூர்ப் பெருமானே! என்று விளிக்கவேண்டி யிருக்க 'திருமாலிருஞ் சோலைமலையுறையும் மாயா!' என விளித்தது—சிறு புலியூரி லுறையும் பெருமானும் திருமலையிலுறையும் பெருமானும் ஒருவரே யென்கிற உண் மையைக் காட்டுதற்கேயாம். இதை வடநூலார் 'தர்மி ஐக்யம்' என்பர்கள் ஸ்தா னத்தில் பேதமே யொழிய தர்மியில் [எம்பெருமானில்] பேதமில்லை யென்கிற பர மார்த்தம் இத்தகைய விளியினால் விளங்கும். 'திருமாலிருஞ் சோலைமலை யுறையும் மாயா! நீ சிறுபுலியூர்ச் சல சயனத்தாயோ?" என்று கேட்டிருக்கிறவிது "சிறுபுலி யூர்ச் சலசயனத்துறையுமாயா! நீ திருமாலிருஞ் சோலைமலையிலுள்ளாயோ?" என் கிற கேள்வியிற் காட்டிலும் வேறுபட்டதன்று என்று திண்ணமாக வெண்ணுக.

எங்குமுள்ள பெருமானை 'அங்கிருக்கிறாயா? இங்கிருக்கிறாயா?' என்று விகற் பித்துக் கேட்டிருப்பதானது 'எவ்விடத்திருப்பதில் உனக்கு உகப்பு அதிகம்?' என்று கேட்பதாகக் கொள்ளலாம். இக் கேள்வி போலவே கூரத்தாழ்வான் வரதராஜஸ் தவத்தில் பேரருளாளப் பெருமாளை நோக்கி "பக்தாநாம் யத் வபுஷி தஹரம்* என்கிற ச்லோகத்தில் கேள்வி கேட்கிறார். பக்தர்களின் ஹ்ருதய புண்டரீகம், ஆஸன பத்மம், வேதாந்தம், நம்மாழ்வாருடைய திருமுடி, ஹஸ்திகிரியின் சிகரம் ஆகிய இந்த ஸ்தான விசேஷங்களுக்குள், "தே பாதாப்ஜயோ: கிம் அதி ஸுகதம்?' உன் னுடைய திருவடித் தாமரைகளுக்கு மிகவும் ஸுகாவஹமான இடம் எது? என்று வினவியிருக்கின்றார். அத்தகைய வினாவே இங்கும் விவக்ஷிதம் என்னலாம்.

இப்பாசுரத்தில் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி வரு மாறு—"இத்தால் சொல்லிற்றாய்த்து—ஸௌபரி பல வடிவு கொண்டாப்போலே இவ்வோ விடங்கள் தோறும் இனி அவ்வருகில்லை யென்னும்படி குறையற வர்த் திக்கிறபடியைக் காட்டிக் கொடுத்தான்' என்று. (ஸௌபரியின் சரித்திரம் அடுத்த வியாஸத்திலே விவரிக்கப்படுகிறது; அங்கே கண்டு கொள்க.) எம்பெருமான் ஒவ் வோரிடத்திலும் வர்த்திக்கிறபோது 'இவ்விடத்தில் மாத்திரமே யுள்ளான்' என்று தோற்றும்படி வர்த்திப்பவன். நம் போல்வார், எம்பெருமான் ஓரிடத்திலிருக்கும் படியைக் காணும் போது மற்றோரிடத்திலிருக்கும் படியைக் காண முடியாது. நம்மு டைய கண்ணுக்கு எவ்வளவு காணக்கூடிய சக்தியோ அவ்வளவு காண்போமே யல் லது அதீந்திரியமான விஷயங்களை ஸர்வாத்மநா காணகில்லோம். ஆழ்வார் மயர் வற மதிநலமருளப் பெற்றவராகையாலே, திருமாலிருஞ்சோலையிலிருப்பையும் சிறு புலியூர்ச் சலசயனத்திலிருப்பையும் ஏக காலத்திலே காணப்பெற்றார். இது தாமாகக் காணப்பெற்றதன்று; அவன் தானே தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே காட்டிக் கொடுக்கக் காணப்பெற்றது. அதனாலுண்டான ஆனந்தம் உள்ளடங்கா மல் இப்படிப்பட்ட வினாவை யுட்கொண்ட பாசுரமாகப் புற வெள்ள மிட்டதா யிற்று. பிரானே! நீ பலபல விடங்களில் உகந்துஎழுந்தருளி யிருக்கு மாற்றை அடி யேனுக்கு ஏககாலத்திலே ஸேவை ஸாதிப்பித்த விது என்ன கருணைத்திறமோ! என்று வியந்து கூறுவதுதான் இக்கேள்வின் கருத்து.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கீழே ப்ரஸ்தாவித்த ஸௌபரியின் வரலாறு.

(ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் நான்காவது அம்சம்-இரண்டாமத்யாயம்.)

ஸௌபரியென்னுமொரு மாமுனிவன் நீர்நிலையிலிருந்துகொண்டு பன்னிண்டாண்டு தவம் புரியா நின்ற வளவில் அங்கு ஸம்மதமென்கிற மத்ஸ்யாதிபதி தன்னுடைய ப்ரபலகுடும்பங்களோடு கூடிக் களித்து விளையாடாநின்றபடியைக் கண்ணுற்றுனொருநாள். கண்ணுற்றதும் 'நாமும் இப்படி குடும்பவாழ்க்கையிற் கூடிநின்று சிற்றின்பம் நுகர்ந்து களித்தாலென்ன?' என்று தோன்றிற்று. குடும்பவாழ்க்கையில் பேராவலுண்டாயிற்று. விவாஹம் செய்துகொள்ளவேணுமென்னுமவாவினுல் உடனே நீர்நிலையை விட்டுக் கிளம்பிப் பெண் விசாரிக்கப் புறப்பட்டான். அப்போது மாந்தாதாவென்னு மரசனுக்குப் பல பெண்களிருப்பதாகக் கேள்விப்பட்டு அவனிடஞ்சென்று உன்னுடைய ஐம்பது பெண்களுள் ஒருத்தியை எனக்குக் கன்னிகாதானம் செய்யவேணுமென்று வேண்டினுன். அரசன் இவருடைய கிழத்தனத்தையும் குரூபத்தையும்கண்டு பெண் கொடுக்க இசைந்திலன். 'இவர் மஹர்ஷியென்று மறிந்தவனுகையாலே பெண் கொடுக்க முடியாதென்றுல் நம்மை சபித்துவிடுவரே யென்கிற அச்சமுண்டாகப்பெற்று சிந்தைக் கடலில் ஆழ்ந்திருந்தனன். அன்னவனை நோக்கி முனிவர் 'அரசனே! சிந்திப்பது எதற்காக? பெண்ணைப் பிறந்தவளை எப்படியும் ஒருவனுக்கு விவாஹம் பண்ணிக் கொடுத்தாகவேண்டும்; விரும்பிக்கேட்கிற எனக்குக் கொடுப்பதில் என்ன விசாரம்?' என்றுர். அதற்கு அரசன் எனக்கொன்றுமாக்ஷேபமில்லை; பெண் தானுக விரும்பி வரிக்கும் வரனுக்குக் கன்னிகாதானம் செய்வது எங்கள் குலாசாரம்' என்றனன். அப்படியாகில் பெண்களிருக்குமிடத்திற்கு என்னைப் போகவிடலாமேயென்றுர் முனிவர். அதற்கு இசைந்த அரசன் உடனே அந்த:புரக்காவலனை ஷண்டனை வரவழைத்து அவனேடு கூட முனிவரைக் கந்யா மண்டபத்திற்குப் போக விட்டான். முனிவர் புறப்படும்போதே தமது தவ வலிமையினுல் லோகோத்தரமான ஸௌந்தரியம் வாய்ந்த மேனியைப் பரிக்ரஹித்துக் கொண்டு கன்னிகைகளின் முன்னே சென்று நின்றுர். நின்றதும் அங்கிருந்த ஐம்பது பெண்களும் நான்தானிவரை மணந்துகொள்வேன், நான்தானிவரை மணந்துகொள்வேனென்று போட்டிபோட்டுக் கொண்டு மேல் விழுந்தவாறே இதைக் காவலாளன் அரசனிடம் சென்று அறிவித்தனன். அரசன் அதுகேட்டு இதென்ன ஆச்சரியம்! இதென்ன அற்புதம்! என்று மிகவும் வியந்து ஐம்பது பெண்களையும் அம் முனிவர்க்கே விவாஹம் பண்ணிக் கொடுத்தனன். முனிவரும் விவாஹஞ் செய்துகொண்டு ஐம்பது மனைவியரையும் தமது ஆச்ரமத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், சில்பகலாநிபுணனை விச்வகர்மாவை வரவழைத்து வாபீகூப தடாக உத்யாநாதி ஸகலாதிசய ஸம்பந்நங்களான ஐம்பது மாடமாளிகைகளை நிர்மாணம் செய்வித்து ஒவ்வொரு மாளிகையில் ஒவ்வொருத்தி மிக வின்பம் மன்னி வாழும்படி செய்வித்தார். தாமும் ஐம்பது வடிவுகளைப் பரிக்ரஹித்து அவர்களிடத்தில் ரமித்துக் கொண்டிருக்கின்றுர்.

இப்படி காலம் செல்லுகையில் ஒரு நாள் மாந்தாதாவென்னு மவ்வரசன் பெண்களை க்ஷேமம் விசாரிக்கப் புறப்பட்டு வந்து முதல் மாளிகையிற் புகுந்து அங்கு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாழும் பெண்ணைக் குசலப்ரச்நம் செய்தனன். அவள் தான் ஆச்சரியமான இன்பங்களை யநுபவித்து வருவதாகச் சொல்லித் தன்னுடைய பரமஸந்தோஷத்தைக் கூறி, ஆனுல் ஒரு துக்கமிருப்பதாக வுரைத்தாள் – 'உம்முடைய மருமகப்பிள்ளையான முனிவர் எப்போதும் இந்த மாளிகையிலேயே கிடக்கிறார்; இவ்விடம் விட்டுப் பெயர்வதேயில்லை. இதற்காக் எனது ஸஹோதரிகள் துக்கித்திருப்பார்களே என்பதொன்றே எனக்கு துக்கம்' என்றாள்.

அடைவே ஒவ்வொரு மகளையும் க்ஷேமம் விசாரிக்கப் போனவிடத்தில் ஒவ்வொருத்தியும் இவ்வண்ணமாகவே சொல்லக் கேட்ட அரசன் முனிவருடைய ப்ரபாவாதிசயமிது வென்றறிந்து, ஏகாந்தமாக வீற்றிருக்கின்ற அம் முனிவர் பக்கலிலே சென்று பூஜித்துத் தன்னுடைய பரமானந்தத்தைத் தெரிவித்து "மஹாநுபாவரே! உம்முடைய மஹத்தான தபஸ்ஸு ஸித்தியடைந்தவிதம் வாசாமகோசரமாயிருக்கின்றதே! இப்படிப்பட்ட ப்ரபாவத்தை நான் வேறு எந்த மஹர்ஷியிடத்தும் கண்டிலேன்; உம்முடைய தபஸ்ஸித்தி ப்ரபாவம் லோகவிலக்ஷண மாயிரா நின்றதந்தோ;" என்று புகழ்ந்து கூறிச் சில நாள் அங்கே தங்கியிருந்து ஸ்வஸ்தானம் மீண்டனன்.

ஸௌபரி முனிவருக்கு நாளடைவில் நூற்றைம்பது மக்கள் பிறந்தனர். மேன்மேலும் அவர்க்குக் குடும்ப வாழ்க்கையில் ஆசாபாசம் அளவு கடந்து பெருகிக் கொண்டே சென்றது. ஆசைகள் எவ்வளவு நிறைவேறினாலும் மேன்மேலும் புதிது புதிதான ஆசைப்பெருக்குகள் தோன்றிக் கொண்டே யிருக்கின்றனவேயன்றி ஆசையொழிவது ஈஷத்துமில்லையே யென்று மிகவும் அநுதபித்துக் காடு சென்று சேர்ந்து பரமபுருஷனிடத்திலே மனம் லயித்து முக்தி பெற்றார். .... *

அபூர்வக்ரந்த லாபத்தைப்பற்றி

ஸ்ரீராமாநுஜன் சென்ற இதழில் அதாவது *(251 ல்)* (பக்கம் 18ல்) "அபூர்வக்ரந்தலாபம்" என்ற மகுடத்தின் கீழ் நாம் வெளியிட்டிருந்த மகிழ்ச்சிச்செய்தி அன்பர்களுக்கு நினைவிருக்கும். ஸ்ரீமந்நிகமாந்தமஹாகுரு பணித்த தத்வார்த்தரத்நாவளி யென்கிறக்ரந்தம் லுப்தமாய் விட்டதென்று பெரியார் சொல்லிவந்தார்களென்றும், அது டீகையோடுங்கிடைத்து தேவநாகரிலிபியில் அச்சாகி வருகிறதென்றும் தெரிவித்திருந்தோம். அதன்படி அந்த அருமையான க்ரந்தரத்னம் அச்சாகி நமது வைதிகமநோஹராவில் ஓருபகுதி வெளிவந்து வித்வான்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஸாவசேஷமாயிருக்கின்றவிது தைமாசிக்குள் நிச்சேஷமாக அச்சாகி வெளிவந்துவிடும். ஒரு ரூபாஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டு மூலமனுப்புவோம்.

மானேஜர்

ஸ்ரீராமாநுஜன் கார்யாலயம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கீழே ப்ரஸ்தாவித்த ரத்னுவளீயைப்பற்றி.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுரு பணித்த தத்வார்த்த ரத்னுவளியை நமது வைதிக மநோஹராபத்ரிகையில் ஸேவிக்கப் பெற்ற பலபல வித்வான்களில் சிலர் நமக்குக் கடிதமெழுதியிருப்பதாவது- "தேவரீர் வேதாந்த தேசிக க்ரந்தமாலை அச்சிட்ட போது இந்த க்ரந்தம் அந்த மாலையில் சேர்க்கப்பட வில்லையே, இப்பெயருள்ள வொரு க்ரந்தம் அவதரித்திருந்ததாகவும் ப்ரஸ்தாவிக்கவில்லையே; அப்படியிருக்க இப்போது இதை ஸ்ரீதேசிக க்ருதியாக வெளியிடக் காரண மென்ன? இதற்கு ப்ராமாணிகமாக பதில் ஸாதிக்கவேணும்" என்று.

அவர்களுக்கு அடியேன் எழுதக் கருதிய பதிலை அனைவரும் தெரிந்து கொள்வது நலமென்று தோன்றி இங்கே வெளியிடுகிறேன்.

"ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஏழாவது நூற்றுண்டு நிறைவு மலர்
கீலக வருஷ புரட்டாசித் திருவோணம்
2-10 1968. வெளியிடுவது மத்தியக்குழு, மயிலை"

என்று பிரசுரமாகியுள்ள மிகப்பெரிய புத்தகத்தில் (பக்கம் 246 ல்) "தேடிக் காணவேண்டிய ஸ்ரீஸ்வாமியின் கிரந்தங்கள்" என்று மகுடமுள்ள வொரு கட்டுரை வெளிவந்துள்ளது. அதிலிருந்து சிற்சில வாக்கியங்களை ஈண்டெடுத்துக் காட்டுகிறேன். அக் கட்டுரையெழுதியவர் இன்னுரென்பதை முன்னம் தெரிவிக்கிறேன்.

"ஸ்ரீமதுபய வேதாந்தவித்வான் நியாய வ்யாகரண
வேதாந்த சிரோமணி. பையம்பாடி சேட்டலூர்
ஸ்ரீவத்ஸாங்கா சாரியர் ஸ்வாமி. ப்ரின்ஸ்பால்.
ஸம்ஸ்க்ருத கலா சாலை பூவிருந்தவல்லி." என்றுள்ளது.

இந்த வித்வான் கீர்த்திமூர்த்தியான ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமிக்கு நெருங்கின அநுபந்தியென்று சொல்லப்படுகிறுர். உண்மையில் இவர் சிறந்த விவேகியென்றும் உயர்ந்த விமர்ச குசலரென்றும் கேள்விப்படுகிறோம். அதற்குத் தக்கபடி சில நல்ல விமர்சங்களையும் செய்திருக்கிறுர் குறிப்பிட்ட க ்டுரையில்.

கட்டுரையின்ஆரம்பம் என்ன வென்றுல்,

"அதிகரண சிந்தாமணியில் பராயத்தாதிகரணத்தில் (239 சுலோகம்) ஸ்ரீமத் குமாரவரத தேசிகன் [ததுக்தம் ஆசார்யைரேவ ஸ்துத்யாரம்பே *முகுந்தகருணும் வந்தே முக்தேஷ்வதிகவத்ஸலாம், ஸ்வரூபஸம்ஸ்தவெள யஸ்யா நிர்ஹேதுகஸஹேதுகெள* இதி] என்று ஸாதித்துள்ளார். இதனுல் ஸ்ரீமத் ஸ்வாமியின் [தேசிகனுடைய] ஏதோ வொரு ஸ்தோத்ராரம்பத்தில் இவ்விதம் முதல் சுலோகமிருப்பதாய் அறியப்படுகிறது. ஷ சுலோகத்தை ஸ்ரீகுமாரவரதாசாரியரே தமது ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரார்த்த ஸங்க்ரஹத்தி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

லும் த்வயாதிகாரத்தில் எடுத்து உதாஹரித்திருக்கிறார். இதுபற்றி பெரியோர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டதில் "இந்த சுலோகம் தயாசதகத்தின் ஆரம்பத்தில் இருந்திருக்கக்கூடும்" என்றருளிச் செய்தார்கள். ஸ்தோத்ரத்தில் விஜ்ஞாபித்துக் கொள்ளும் தயா (கருணை) விஷயமாகவே இந்த ச்லோகத்திலும் அதன் ஸ்வரூப ஸம்ஸ்தவங்களைப்பற்றி ஸாதிக்கிறார் ஆகவே இது பொருத்தமாயுள்ளது. மேலும் தயாசதகத்தில் ஆரம்பத்தில் அநுஷ்டுப் சுலோகங்களே. இதுவும் அனுஷ்டுப். இதனாலும் இதுஸரியே. வேறே சிலர் அருளிச் செய்ததாவது...... ... அச்சு ஏற்பட்டு மூத்ரணம் செய்ய ஆரம்பித்தபோது கிடைத்தவை போக மீதமுள்ளவை இன்றும் ப்ராசீனவித்வத் திருமாளிகைகளிலும் சில கோசாகாரங்களிலும் கிடைக்கக்கூடும் ... தேடிக்காண வேண்டியுள்ளது. இதனால் நாம் அறிவது யாதெனில் பலவிஷயங்களைப்பற்றி பல ஸந்தர்ப்பங்களில் பலக்ரந்தங்களை ஸ்ரீஸ்வாமி அருளிச் செய்துள்ளாரென்பதும், அச்சில் வெளிவராமல் ப்ராக்ருதநிவேதிகா, தசார்த்த கோசம், சில்பார்த்த ஸாரம் முதலிய வற்றைப் போல் மேலும் பலசாஸ்த்ரங்களில் பலவுள்ளன வென்பதும், வித்யாவ்யஸனிகள் ஆர்வமுடன் தேடினால் என்றோ இவையும் கிடைக்கு மென்பது மாகும்."

தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய தேசிக திவ்யக்ரந்தங்கள் பலவுண்டு என்பதையே இந்த வித்வான் புந: புந: எழுதி முடித்திருக்கிறார்.

தேடிக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் நாம் ஏதும் முயற்சி கொள்ளவில்லை. முயற்சி கொண்ட பண்டிதர்கள் சிலர் சேகரித்து அனுப்பியதை நாம் முத்ரணம் செய்து வருகிறோமத்தனை. ஸூக்திஸந்நிவேசங்களைக் காணும் போது ஸ்வாமி தேசிகன் தவிர வேறு எந்த வித்வானாலும் அதிகம்பீரஸந்தர்ப்பமான இந்த க்ருதி இயற்ற முடியாதென்று பலப்ராஜ்ஞர்கள் ஆழ்ந்து நோக்கித் தெரிவிக்கிறார்கள்.

முடிவாக நம்முடைய விஜ்ஞாபன மிவ்வளவே; சப்தார்த்த பௌஷ்கல்யத்தாலே தேசிக திவ்யஸூக்தியே யென்று அறுதியிடத் தக்கதாகவுள்ள இந்த தத்வார்த்த ரத்னாவளிக்ருதியில் அஸம்பத்தமான விஷயம் இருப்பதாகத் தோன்றினால் அதை ப்ராமாணிக பண்டிதர்கள் நிந்தாபரிஹாஸ லவலேசமுமின்றிக்கே ச்லோ* ரூபமாகவே வெளியிடலாம். ....

மார்கழித் திங்கள் காலக்ஷேபம்

16-12-69 செவ்வாய்க்கிழமையன்று தனுர்மாஸத் தொடக்கமாதலால் நமது பத்ராதிபர் (P.B.A ஸ்வாமி) அன்று முதல் *13-1-1970* போகிப்பண்டிகை வரையில் திருப்பாவை ப்ரவசனார்த்தமாக சென்னை மாநகரில் உப்பட்டூர் ஆழ்வார் செட்டியார் ராமாநுஜ கூடத்தில் எழுந்தருளியிருப்பர். தினப்படி மாலை 6 மணி முதல் 8மணிவரை உபந்யாஸம் நடைபெறும். அந்த *30*நாளும் ஸ்வாமிக்கு விலாஸம் கீழ்க்கண்டவாறு;—

Sri. P. B. ANNANGARACHARYA

48. Govindappa Naick Street, Madras.—1

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மிகச் சிறந்த ரத்னத்தை யிழந்தோம்

சென்னை கீழ்ப்பாக்கத்தில் ஸ்ரீமதுபயவே. V. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி யென்று ஸுப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த அட்வகேட் ஸ்வாமி 14-11-69 வெள்ளிக்கிழமையன்று காலையில் தமது திருமாளிகையில் திருநாடலங்கரித்தாரென்னும் செய்தியைத் தெரிவிக்க மிகமிக வருந்துகிறோம். ஸ்வாமிக்கு வயது 77 ஆனாலும் லோகோபகாரார்த்தமாக இன்னும் பலவாண்டுகள் இந்நிலவுலகத்தை அலங்கரித்திருக்கவேண்டியவர். ஸ்வாமி ஸாதாரணமான அட்வகேட்டல்லர். மஹாமேதாவி, மஹாவிவேகி, மஹாசதுரர் என்று பல ஜட்ஜ்களாலுங் கூடக் கொண்டாடப்பட்டு விளங்கியவர். ஸ்வாமியால் பிரபல தண்டனைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் பல்லாயிரவர். எந்த வியவஹாரத்திலும் ஸ்வாமி வெற்றி தவிர தோல்வியடைந்தது கிடையவேகிடையாதென்று அட்வகேட்டுகள் பலரும் சொல்லக் கேட்கிறோம். தப்பான விவகாரங்களில் ஸ்வாமி தலையிடமாட்டாரென்று ஸகலஜட்ஜ்களுக்கும் இவரிடத்தில் நம்பிக்கையும் மதிப்புமுண்டு.

இந்த ஸ்வாமியோடு நெருக்கம் அடியேனுக்கு நாற்பது வருஷகாலமாக வுண்டு. சென்னைத் தொண்டமண்டலம் ஸ்கூல்ஹாலில் அடியேனுடைய உபந்யாஸம் ஆரம்பித்த காலத்தில் தம்மை இன்னாரென்று காட்டிக் கொள்ளாமலே சில வருஷங்கள் ஒரு மூலையில் வீற்றிருந்து ஸேவித்துப் போவராம். இதைத் தாமே பல கால் சொல்லுவர். பஹுச்ருதர். பரமரஸிகர். தொண்டமண்டலம் ஸ்கூல்ஹாலில் ஏறக்குறைய இருபத்தைந்து வருஷகாலம் நடந்து வந்த ப்ரவசன கோஷ்டியில் இந்த ஸ்வாமி ஸேவை ஸாதியாத நாட்கள் நினைவுக்கு வரவில்லை. அவ்விடத்தில் விஷ்ணுபாரம்யத்தை தாராளமாகச் சொல்லுவதற்கு இடையூறு நேர்ந்த ஸந்தர்ப்பத்தில் இந்த ஸ்வாமியே அடியேனை அந்த ஸபையிலிருந்து விலகச் செய்து, ஸத்கால க்ஷேபஸபையென்று புதிய ஸபையொன்று வேறு ஹாலில் ஏற்படுத்தி அதற்குத் தாமே பிரஸிடெண்டு பதவியை வஹித்திருந்தார்.

ஸ்வாமிக்கு இரு திருக்குமாரர்களுண்டு. மூத்தவர் பதினைந்து வருஷங்களுக்கு முன்னமே அகாலம்ருத்யுவையடைந்து விட்டார். இளையகுமாரர் இப்போது ப்ரதிஷ்டிதராய் விளங்கிவருகிறார். இவரே சரமக்ரியையைச் சிறப்புற நடத்தினார்.

திருக்கண்ணபுரம் ஸமீபத்தில் உபய வேதாந்தபுரம் என்று ப்ரஸித்தமான அக்ரஹாரத்தில் ஜனித்து ஸதாசார்யஸம்பந்தம் பெற்றுப் பரம விலக்ஷணராயும் ஸம்ப்ரதாய ப்ரதீபமாயும் விளங்கின இந்த ஸ்வாமியின் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய வல்ல மஹானை எம்பெருமானேயறிவன். .... *

மற்றொரு ரத்னமும் மறைந்தது.

சென்னை வைச்ய ஸமுதாயத்தில் பிரபல வியாபாரியும் பரம ஆஸ்திகரும் மிகச்சிறந்த தர்மிஷ்டருமான ஸ்ரீமான் **Curzon Co.** சேஷாசலம் செட்டியார் **B.A.B.L** அவர்கள் 22-11-69 சனிக்கிழமையன்று ஊட்டியில் இதய கோசக் கோளாறினால் அநாயாஸமரண மடைந்தார். பல தருமஸ்தாபனங்களில் நிர்வாஹம் கொண்டிருந்த இப்பெரியாருடைய மறைவுக்கு சென்னை மாநகரம் முழுவதும் வருந்துகின்றது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பக்தி ப்ரதாநமா? ஆசாரம் ப்ரதாநமா?

உலகில் சிலர் வர்ணாச்ரமாசாரங்களில் ஜாகரூகர்களாயிருப்பர்கள்; ஆனால் அவர்களுக்கு பகவத்பக்தி இல்லை யென்னும்படியாயிருக்கும். சிலர்க்கு பக்தி தலை சிறந்து விளங்கும்; ஆனால் அவர்களுக்கு வர்ணாச்ரமாசாரங்களில் சிறிதும் ச்ரத்தை இல்லாமலிருக்கும். இவ்விரண்டு வகுப்பில் எது சிறந்தது? என்கிற விசாரம் ப்ராப்த மாயிருக்கின்றது. சாஸ்த்ரங்களை ஆராய்ந்து பார்த்தாலோ ஓரிடத்தில் வர்ணாச்ர மாசாரங்களுக்கு ப்ராதாந்யமும், மற்றோரிடத்தில் பக்திக்கு ப்ராதாந்யமும் காண கிறது. எங்ஙனே யென்னில் "ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:" என்கிற பக வத்வசனம் ஸுப்ரஸித்தமானது. இதன் பொருள் என்ன வென்றால், வேதங்களும் அவற்றின் உபப்ரும்ஹணங்களும் ஸாக்ஷாத் என்னுடைய கட்டளையே யாகும்; அப்படிப்பட்ட ச்ருதிஸ்மிருதிகளை மீறி நடப்பவன் என்னுடைய ஆஜ்ஞையை உல லங்கனம் செய்தவனாதலால் எனக்கு த்ரோஹம் செய்தவனாகின்றான். அவன் என் பக்கலல் பக்தி பூண்டிருந்தாலும் வர்ணாச்ரமாசாரவிரஹித னென்னுங் காரணத் தினால் அவைஷ்ணவனேயாவன் என்பதாம். ஆக இந்த பகவத் வசனத்தினால் வர் ணாச்ரமாசாரமே முக்கியமென்றும், பக்தி முக்கியமன்றென்றும் விளங்கிற்று. வர் ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந், விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ் தத்தோஷகாரக:" என்று பல வசனங்களும் இதற்கு உபஷ்டம்பகமாகக் காண கின்றன.

இனி பகவத் கீதையில் கீதாசார்யன் ஸாக்ஷாத்தாக அருளிச் செய்வது பாரீர்; அதில் ஒன்பதாமத்யாயத்தில் (30) ["அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக், ஸாதுரேவ ஸ மந்தவ்யஸ் ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:"]

என்று, ஆசாரத்திற்கு அப்ராதாந்யமும் பக்திக்கு ப்ராதாந்யமும் கொடுத்துப் பேசப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகத்தின் கருத்தை நம்முடைய பாஷ்யகாரர் மிக வினிதாக விவரித்தருளுகிறார். அந்த பாஷ்ய ஸூக்தியையே மொழிபெயர்த்தெழுது கிறோம்; அந்தந்த ஜாதியில் பிறந்தவர்களுக்கு இன்னது செய்யத்தக்க தென்றும் இன்னது விலக்கத் தக்க தென்றும் சாஸ்த்ரங்களிலே விதிநிஷேதங்கள் காணப்படு கின்றன; அவற்றை அநுவர்த்தியாமல் கடந்தாயினும் யாவனொருவன் நம்மிடத் திலே ஸ்வயம்ப்ரயோஜனமான பக்தியைச் செலுத்துகிறானோ அவனை ஸ்ரீவைஷ்ண வாக்ரேஸரனாக நினைத்து பஹுமானிக்கவேணும். ஏனென்றால், [ஸ: ஸம்யக் வ்யவ ஸிதோ ஹி.] இந்த பரமபக்தனுடைய அத்யவஸாயம் மிகச் சிறந்தது. ஸ்ரீமந்நாரா யணனையே தனக்குத் தெய்வமாகவும் ஆசார்யனாகவும் தோழனாகவும் பரமபோக்ய வஸ்து ஸமூஹமாகவும் கொள்ளுகையாகிற அத்யவ்ஸாயம் பிறர்க்கு அரிதாய் இவனுக்கே எளிதாய் இருக்கின்றதன்றோ. இப்படிப்பட்ட அத்யவஸாயம் இவ னுக்குண்டென்பதை அநந்ய ப்ரயோஜநமாக இவன் செய்யும் நிரந்தர பஜனத்தைக் கொண்டே அறியலாம். இப்படிப்பட்ட பக்தியுக்தனிடத்திலே ஆசார லோபம் இருந் தால் அதுவொரு பெரிய விஷயமாகக் கொள்ளத் தக்கதன்று; அது மிகச் சிறுவிஷ யமே யாதலால் அது கொண்டு அநாதரியாமல் விசேஷித்து பஹுமானிக்கத் தக்க வனே—என்பது நம் பாஷ்யகாரருடைய பாஷ்ய ப்ரக்ரியை.

முதலில் உதாஹரித்த * மத்பக்தோபி ந வைஷ்ணவ:* என்ற வசனத்திற் கும் *ஸாது ரேவ ஸ மந்தவ்ய:* என்ற இந்த வசனத்திற்கும் பரஸ்பர விரோத மிருப்பதாகத் தோன்றக்கூடும். பக்தியும் ஆசாரமும் ஸமப்ரதாநமாகையாலே * ந ஹி நிந்தா ந்யாயத்தாலே விரோத சமநம் பண்ணலாமென்று சிலர் சொல்லுவர்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.